மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2019
அசல் வழக்கு எண்.89/2019

டி. ரங்கநாதன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மகாலிங்கம்
2. அழகம்மாள்
3. அலமேலு ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.04.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.குமாரசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் பங்காளிகள். வழக்கு சொத்துகளும், இதர சொத்துகளும் ஆதியில் மனுதாரரின் தாத்தா ராமகவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். ராமகவுண்டருக்கு பெருமாள் (எ) ராமகவுண்டர், சிங்காரம், தங்கவேலு ஆகியோர் மகன்கள் ஆவார். ராமகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மூன்று மகன்களும் கடந்த 16.02.1968ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாகம் செய்து கொண்டனர். வழக்கு சொத்துகள் தங்கவேலுக்கும், இதர சொத்துகள் சிங்காரம் மற்றும் பெருமாள் (எ) ராமகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது. மேற்படி தங்கவேலுவின் மகனான மனுதாரருக்கு அவருடைய தகப்பனார் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தாவா சொத்துகளை கொடுத்துவிட்டார். அதன் அடிப்படையில் மனுதாரர் பெயருக்கு

பட்டா ஏற்பட்டுள்ளது. மனுதாரர் மனுசொத்தில் விவசாயம் செய்தும், வீடு கட்டியும் குடியிருந்து வருகிறார்.

(ii) ச.எண்.16/1பி–ல் உள்ள பொதுப்பாதை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் தற்போது சுமூகமான உறவு இல்லை. எனவே பொதுப்பாதையை அனுபவிக்க இடையூறு செய்து வருகின்றனர். இந்நிலையில் 29.03.2019ல் எதிர்மனுதாரர்கள் கற்களால் ஆன கல்கட்டு அமைக்க முயற்சி செய்தனர். அதனை மனுதாரர் தடுத்துவிட்டார். மனுதாரருக்கு வழக்கு பாதையை தவிர மனுதாரரின் சொத்திற்கு செல்வதற்கு வேறு பாதை இல்லை. 1968ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதிலிருந்து மனுதாரரின் குடும்பம் வழக்கு பாதையை அனுபவித்து வருகின்றது. அந்த இடம் எதிர்மனுதாரர்கள் பெயரில் இருந்தாலும் மனுதாரருக்கு தேவையின்பால் வசதியுரிமையும், நீடானுபோக வசதியுரிமையும் ஏற்பட்டுள்ளது. தற்போது எதிர்மனுதாரர்கள் வழக்கு பாதையில் கல்கட்டு அமைத்து இயற்பியல் தோற்றத்தை மாற்ற முயற்சி செய்துவருகின்றனர். எனவே நீதிமன்ற ஆணையாளரை நியமித்து வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(குறிப்பாணையின் பேரில் எதிர்வழக்குரை எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் பங்காளிகள் என்பது உண்மையாகும். வழக்கு சொத்துகளும், இதர சொத்துகளும் ராமகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதும், ராமகவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய மூன்று மகன்களும் 16.02.1968ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்பதும் உண்மையாகும். அதில் மனுதாரரின் தகப்பனாருக்கு வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்பதும் உண்மையாகும். ஆனால் எதிர்மனுதாரர்களின் சொத்தையும் சேர்த்து வழக்கு சொத்தாக மனுதாரர் காண்பித்துள்ளார். மனுதாரரின் தகப்பனாருக்கு ச.எண்.207/2இ ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் எவ்வித நடைபாதையும், வண்டிப்பாதையும் கொடுக்கப்பட்டுள்ளதாக பாகபிரிவினை ஆவணத்தில் கூறப்படவில்லை.

(ii) எதிர்மனுதாரர்களின் தகப்பனார் சிங்காரம், பெருமாள்கவுண்டர் மற்றும் ரங்கநாதன் ஆகியோரிடமிருந்து ச.எண்.207/2ல் 0.25 செண்ட் ச.எண்.16/1ல் 0.25 செண்ட் மற்றும் ச.எண்.16/1ல் 50 செண்ட் ஆகியவற்றை கிரயம் பெற்றுள்ளார். கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்களின் தகப்பனார் அனுபவித்து வந்து அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வருகின்றனர். மேற்படி கிரயப்பத்திரங்களை மறைத்துவிட்டு வாய்மொழி பாகப்பிரிவினையை மட்டும் கூறி மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(iii) ச.எண்.16/1பி எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அதில் பொதுப்பாதை உள்ளது என கூறுவது பொய்யாகும். மனுதாரர் அனுபவித்து வருவதற்கு இடையூறு செய்வதாக கூறுவதும் பொய்யாகும். அதேபோல் 1968லிருந்து பாதையை அனுபவித்து வருவதாகவும், அதில் வசதியுரிமை ஏற்பட்டுள்ளது என கூறுவதும் பொய்யாகும். மனுதாரர் தன்னுடைய சொத்திற்கு செல்வதற்கு தென்வடல் மண்ரோடு உள்ளது. ஆனால் தவறான அனுகூலம் பெறுவதற்காக ச.எண்.16/1பி–ல் 15அடி அகலத்திலும், 120 அடி நீளத்திலும் கிழமேலாக பாதை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது. ஆகவே எவ்வித பரிகாரமும் மனுதாரர் கோர முடியாது. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) இருதரப்பிலும் மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் பங்காளிகள் என்பதையும், வழக்கு சொத்துகளும், இதர சொத்துகளும் ஆதியில் மனுதாரரின் தாத்தா

ராமகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதையும், ராமகவுண்டருக்கு பெருமாள் (எ) ராமகவுண்டர், சிங்காரம், தங்கவேலு ஆகியோர் மகன்கள் என்பதையும், ராமகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மூன்று மகன்களும் கடந்த 16.02.1968 ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாகம் செய்து கொண்டனர் என்பதையும், வழக்கு சொத்துகள் தங்கவேலுக்கும், இதர சொத்துகள் சிங்காரம் மற்றும் பெருமாள் (எ) ராமகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்பதையும், மனு ச.எண்.16/1 பி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

(ii) மனுதாரர் தரப்பில் மேற்படி தங்கவேலுவின் மகனான மனுதாரருக்கு அவருடைய தகப்பனார் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தாவா சொத்துகளை கொடுத்துவிட்டார் எனவும், அதன் அடிப்படையில் மனுதாரர் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது எனவும், மனுதாரர் மனுசொத்தில் விவசாயம் செய்தும், வீடு கட்டியும் குடியிருந்து வருகிறார் எனவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் தற்போது சுமூகமான உறவு இல்லை எனவும், மனுதாரருக்கு வழக்கு பாதையை தவிர மனுதாரரின் சொத்திற்கு செல்வதற்கு வேறு பாதை இல்லை எனவும், 1968 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதிலிருந்து மனுதாரரின் குடும்பம் வழக்கு பாதையை அனுபவித்து வருகின்றனர் எனவும், அந்த இடம் எதிர்மனுதாரர்கள் பெயரில் இருந்தாலும் மனுதாரருக்கு தேவையின்பால் வசதியுரிமையும், நீடானுபோக வசதியுரிமையும் ஏற்பட்டுள்ளது எனவும், தற்போது எதிர்மனுதாரர்கள் வழக்கு பாதையில் கல்கட்டு அமைத்து இயற்பியல் தோற்றத்தை மாற்ற முயற்சி செய்துவருகின்றனர் எனவும், எனவே நீதிமன்ற ஆணையாளரை நியமித்து வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாகப்பிரிவினை ஆவணத்தில் பாதை குறித்து கூறப்படவில்லை எனவும், எதிர்மனுதாரர்களின் தகப்பனார் சிங்காரம், பெருமாள்கவுண்டர் மற்றும் ரங்கநாதன் ஆகியோரிடமிருந்து ச.எண்.207/2 ல் 0.25 செண்ட் ச.எண்.16/1 ல் 0.25 செண்ட் மற்றும் ச.எண்.16/1 ல் 50 செண்ட் ஆகியவற்றை கிரயம் பெற்றுள்ளார் எனவும், கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்களின் தகப்பனார் அனுபவித்து வந்து அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு

எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வருகின்றனர் எனவும், ஆனால் அதில் பொதுப்பாதை உள்ளது என கூறுவது பொய் எனவும், மனுதாரர் அனுபவித்து வருவதற்கு இடையூறு செய்வதாக கூறுவதும் பொய் எனவும், அதேபோல் 1968 லிருந்து பாதையை அனுபவித்து வருவதாகவும், அதில் வசதியுரிமை ஏற்பட்டுள்ளது என கூறுவதும் பொய் எனவும், மனுதாரர் தன்னுடைய சொத்திற்கு செல்வதற்கு தென்வடல் மண்ரோடு உள்ளது எனவும், ஆனால் தவறான அனுகூலம் பெறுவதற்காக எதிர்மனுதாரர்களின் ச.எண்.16/1 பி–ல் 15 அடி அகலத்திலும், 120 அடி நீளத்திலும் கிழமேலாக பாதை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மனுதாரர்/வாதி வழக்கு வண்டிப்பாதையை அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தடுக்கக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் வழக்கு பாதை உள்ளது எனவும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாதை இல்லை எனவும் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது. ஆகவே வழக்கு பாதை உள்ளதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கை இறுதியாக தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக வழக்கறிஞர் எஸ்.சாரதா நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு பாதை உள்ளதா, இல்லையா என்பது குறித்தும் பாதை இருந்தால் அதன் நீள, அகலங்களை குறிப்பிட்டும், அதன் இயற்பியல் தோற்றம் குறித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.4000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க 16.06.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.